# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 11. பொது மற்றும் தனியார் வாகனத் தரிப்பிடங்கள்

இவ்வறிவுறுத்தல்கள் மாநகர சபைகளின் நிர்வாகத்தின் கீழுள்ள வாகனத் தரிப்பிடங்கள் உள்ளடங்கலாக பொது மற்றும் தனியார் வாகனத்தரிப்பிடங்களை நடத்துபவர்களையும் பயன்படுத்துவோரையும் நோக்காகக் கொண்டனவாகும்.

*பிரத்தியேக தகவல்கள்/ வழிகாட்டல்கள்*

*உரிமையாளர்கள் / நிருவாகிகள் மற்றும் தரிப்பிடக்கட்டணம் அறவிடுவோர்*

- தரிப்பிடங்களைத் திறப்பதற்கு முன்னர் முகக்கவசங்கள், தொற்றுநீக்கிகள் போன்றவற்றைத் தேவையானளவு இருப்பில் வைத்துக் கொள்வதுடன் தேவைக்கேற்றவாறு ஊழியர்களின் எண்ணிக்கையை ஆகக்குறைந்த அளவில் பேணுவதற்குத் திட்டமிடவும்.
- வாடிக்கையாளருடன் நேரடியாகத் தொடர்புபடும் ஊழியர்கள் அனைவரும் முகக்கவசங்கள் அணிந்திருப்பதையும் தேவைப்படும் நேரங்களில் கைகளைச் சுத்திகரிக்கும் தூய்மிப்பான்களை உபயோகிப்பதையும் உறுதிப்படுத்துதல். முற்றிலும் அடைக்கப்பட்ட கூண்டுகளினுள் இருந்து பணிபுரிவோர் மற்றும் தன்னியக்க நுழைவாயில்களை நிர்வகிக்கும் ஊழியர்களுக்கு இம்முறை அவசியமற்றது.
- ஊழியர்கள் இலகுவாக அணுகக்கூடியதொரு பொதுவான இடத்தில் கைகளைக் கழுவுவதற்காக திரவ சவர்க்காரத்துடன் கூடியதான கைகழுவும் தொட்டியொன்றினை நிறுவுதல் (உ-ம்: நுழைவாயில், வெளியேறும் வாயில்).
- ஊழியர்களின் உடல்நலம் குறித்து தினமும் விசாரிக்கும் முறையையும் (காய்ச்சல் மற்றும் இருமல் / சளி போன்ற சுவாச அறிகுறிகளைக் கேளுங்கள்) மற்றும் அவர்களுக்கு தகுந்த மருத்துவ ஆலோசனையைப் பெறுவதற்கான செயல்முறைகளையையும் பின்பற்றுங்கள்..
- அடிக்கடி தொடுகைக்குட்படும் மேற்பரப்புக்களை கிரமமாகச் சுத்தம் செய்தலும் தொற்று நீக்குதலும் ( கொடுக்கல் வாங்கல் இடம், தன்னியக்க இயந்திரங்களின் பொத்தான்கள்).
- தனிப்பட்ட நபர்களுக்கிடையில் தொடர்புபடுதல் மற்றும் பணம் பரிமாறிக் கொள்வதனைக் குறைக்கும் நோக்குடன் தன்னியக்க/ தரிப்பிடக் கட்டண / தன்னியக்க சீட்டுக்கள் வழங்கும் இயந்திரங்கள் போன்றவற்றை வழங்குதல் மற்றும் இம்முறைமையை ஊக்குவித்தல்.
- தரிப்பிடக் கட்டணங்கள் தொடர்பான விபரங்களைத் தெளிவாகக் காட்சிப்படுத்துவதன் மூலம் வாய்மூலமான தொடர்பாடலைக் குறைத்தல்.
- வாடிக்கையாளர்கள் சரியான கட்டணத் தொகையை வழங்குவதை ஊக்குவிப்பதன் மூலம் பணத்தினை ஆளுக்கு ஆள் நேரடியாகப் பரிமாறிக் கொள்வதனைக் குறைத்தல்.
- ஊழியர்கள் சகல வாடிக்கையாளர்களிடமிருந்தும் பிற ஊழியர்களிடமிருந்தும் குறைந்தது ஒரு மீற்றர் உடல் இடைவெளியையேனும் பேணுதல் வேண்டும். கீழிறக்கக் கூடிய சாளரத்தின் ஊடாக வாடிக்கையாளருடன் கதைக்கும்போது பாதுகாப்பான இடைவெளியைப் பேணுதலையும் இது உள்ளடக்குகின்றது.
- கைகளால் பதிவு செய்யும் முறை நடைமுறையில் இருக்குமாயின் ஊழியர்கள் நேரம், வாகன இலக்கம், செலுத்தப்பட்ட தொகை ஆகியவற்றினைப் பதிவு செய்வதற்கான ஒரு பதிவேட்டினை / புத்தகத்தினைப் பேண வேண்டும். வாடிக்கையாளர் பணம் செலுத்திய பின்னர் அவர்கள் 'வழங்கிய தொகையானது பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது' என்பதனை ஊழியர்கள் காட்டவேண்டும். இம்முறையானது பற்றுச்சீட்டினை வழங்குவதைக் காட்டிலும் பாதுகாப்பானது. ஏனெனில் இம்முறை மூலம் நபர்களுக்கு இடையிலான தொடர்புகள் குறைக்கப்படுகின்றன.
- மோட்டார் வாகனத் தரிப்பிடத்தினுள் வாகனங்களை இடமாற்றுவதற்காக வாடிக்கையாளரிடமிருந்து மோட்டார் வாகன சாவிகளைப் பெறுதல் கூடாது. அதற்குப் பதிலாக வாடிக்கையாளர்களைத் தமது தொலைபேசி இலக்கங்களைத் தெளிவாகக் காட்சிப்படுத்தும்படி கோரவும். வாகனத்தனை நகர்த்த வேண்டிய சந்தர்ப்பங்களில் உரிமையாளரைத் தொடர்பு கொண்டு அதனைத் தெரிவிக்கவும்.
- வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் வைப்பதற்கான பாதுகாப்புப் பெட்டக (valet services) சேவையினை வழங்குதல் கூடாது.

- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாகத்தின் உரிமையாளரின் / வேலை வழங்குனரின் / மேலாளரின் பொறுப்பு ஆகும்.

**பயனாளர்கள்/ வாடிக்கையாளர்கள் / எமக்கு**

தனிப்பட்ட நபர்களுக்கிடையில் தொடர்புபடுதல் மற்றும் பணம் பரிமாறிக் கொள்வதனைக் குறைக்கும் நோக்குடன் தன்னியக்க/ தரிப்பிடக் கட்டண / தன்னியக்க சீட்டுக்கள் வழங்கும் இயந்திரங்கள் போன்றவற்றை பாவிக்கலாம். இவ்வியந்திரங்களைப் பயன்படுத்திய பின்னர் கைகளைக் கழுவவும்.

- தனிநபர்களுக்கிடையேயான தொடர்பைக் குறைப்பதற்கும் பணத்தை மாற்றுவதற்கும் தானியங்கி / தரிப்பிடக் கட்டணம் / சுயப் பற்றுச்சீட்டு இயந்திரங்கள் இருந்தால் அதைப் பயன்படுத்தவும். இயந்திரங்களைப் பயன்படுத்திய பிறகு உங்கள் கைகளை சுத்தம் செய்யுங்கள்.
- சரியான கட்டணத் தொகையை வழங்குவதன் மூலம் பணத்தினை ஆளுக்கு ஆள் நேரடியாகப் பரிமாறிக் கொள்வதனைக் குறைத்தல்.
- தரிப்பிடக் கட்டணப் பற்றுச்சீட்டொன்று தங்களுக்கு வழங்கப்படுமாயின் அதனை முறையாக கழிவு கூடையினுள் வீசி எறிந்து விட்டு வேறு பொருட்களைத் தொடுவதற்கு முன்னர் உங்கள் கைகளை கழுவிக கொள்ளுங்கள். தரிப்பிடக் கட்டணப் பதிவேடு ஒன்று கையாளப்படுமாயின் செலுத்தப்பட்ட கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் அப்பதிவேட்டில் பதியப்பட்டமையை உறுதிசெய்து கொள்ளுவதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் பற்றுச்சீட்டு வழங்குமாறு கேட்க வேண்டாம்.
- ஊழியர்களுடன் உரையாடும்போது ஆகக்குறைந்தது ஒரு மீற்றர் உடல் இடைவெளி பேணப்படுதலை உறுதி செய்தல். இது கீழிறக்கக் கூடிய சாளரத்தின் ஊடாக கதைக்கும்போது பாதுகாப்பான இடைவெளியைப் பேணப்படுதலையும் உள்ளடக்குகின்றது.
- உங்கள் வாகனத்தின் சாவியினை தேவையானபோது வாகனத்தினை நகர்தும் பொருட்டுப் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் விட்டுச் செல்ல வேண்டாம். பதிலாகத் உங்களது தொலைபேசி இலக்கத்தினை தெளிவாகக் காட்சிப்படுத்துவதன் மூலம் அவ்வாறான தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் உங்களுக்குத் தொலைபேசி அழைப்பினை மேற்கொள்ளலாம்.
- உங்களது சுயபாதுகாப்பிற்காக பொருள்களைப் பாதுகாக்கும் பெட்டக சேவைகளைப் பயன்படுத்த வேண்டாம்.

**அறிவுறுத்தும் முறைகள்**

- நுழைவாயில்களில் அறிவித்தல்கள்/சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தல்.
- முகாமைத்துவத்தின் மூலம் அனைத்து ஊழியர்களுக்கும் சிறு விளக்கம் அளித்தல்.
- சமூக ஊடகங்கள்.




**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020